# வடமராட்சிப்பிரதேசத்தின் கல்வி நிலையில் சமூகப் பொருளாதார காரணிகளின் வகிபங்கு

**S.Thenesh1 & S.S.Uthayakumar[2]**

[1] Department of Economics University of Jaffna
[2] Department of Economics University of Jaffna

Corresponding author's e-mail: vsthenesh5@gmail.com

**ஆய்வு சுருக்கம்:** இன்றைய உலகிலே மனிதனை வாழ்வாங்கு வாழ வழி செய்வது கல்வி ஆகும் இந்த வகையில் தற்போதய கால கட்டத்தில் மூன்றாம் மண்டல நாடுகள் கல்வியை விருத்தி செய்வதில் பெரும்பங்காற்றுகின்றன. இப்போக்குக்கு ஏற்ப இலங்கையில் கல்வியறிவு மேம்பாட்டுக்காக இலவச கல்வியை வளங்கி வருகின்ற போதும் கல்வி மட்டம் பின்னடைவதற்கு பல தரப்பட்ட சமூக பொருளாதார காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எடுத்துக்காட்டாக ஆசியாவில் எழுத்தறிவு (92.57%) மிக்க நாடுகளில் ஒன்றாக இலங்கை மிளிர்கின்றது. இவ்வகையில் இலங்கையின் வடக்கே யாழ்பாண மாவட்டத்தில் ஒரு பிரிவாக விளங்குகின்ற வடமராட்சி பிரதேசத்தின் கல்வி நிலை ஆய்வுகளை மேற்கொள்வது மிகவும் பயனுடையதாகும். இப்பிரதேசத்தின் கல்வி நிலையில் சமூக பொருளாதார, அரசியல் காரணிகளது வகிபங்கு முக்கியமானதாக அமைகின்றது. எனவே இந்த ஆய்வானது இப்பிரதேசத்தின் வளர்ச்சிக்கும் கல்வி மேம்பாட்டுக்கும் உதவி புரியும். கடந்த கால கல்வி நிலமைகளுக்கு ஏற்ப எதிர் கால கல்வி மேம்பாடு என்பது இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. இதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வு மிக்க பயன்பாடுடையதாகும். ஆய்வுக்கென வடமராட்சி பிரதேசத்தில் கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேசங்களில் வளர்ச்சியடைந்த பாடசாலைகள் இரண்டும் வளர்ச்சிகுறைந்த பாடசாலைகள் இரண்டும் தெரிவு செய்யப்பட்டு அதில் 226 மாணவாகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு கல்வி மீதான சமூக, பொருளாதார காரணிகளின் வகிபாகம் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. இவ்வகையில் இந்த ஆய்வானது புள்ளிவிப நுட்ப முறைகளின் உதவியுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வின் முடிவுகள் பெறப்பட்டு கல்வி நிலைமையில் சமூக பொருளாதார காரணிகளின் தொடர்புகள் பற்றி அறியப்பட்டன. இவ்வகையில் பாடசாலை வரவு ஒழுங்கு, தாய் தந்தையரின் கல்வி மட்டம், பெற்றோர் கொண்டுள் ஆர்வம் இடப்பெயர்வுகள், கல்வி கற்பதற்கான வசதிள், தனியார் கல்வி வசதிகள், தந்தை மதுப்பழக்கம், குடும்ப சமூக பொருளாதார நிலைகள், வசிக்கும் சூழல், குடும்ப பிள்ளைகளின் எண்ணிக்கை போன்ற சமூக பொருளாதர அம்சங்கள் கல்வி நிலையில் தாக்கம் செலுத்துகின்றன என்பது கருதுகோள் ரீதியாக வாய்ப்பு பார்க்கப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன அவ்வகையில் கல்வி நிலையில் சமூக பொருளாதர காரணிகள் அதிகம் தாக்கம் புரிவது ஆய்வு ரீதியாக கண்டறியப்பட்டது.

**திறவு சொற்கள்: கல்வி அடைவு மட்டம், பாடசாலை வரவு, எழுத்தறிவு, இடப்பெயர்வு, வறுமை.**

**ஆய்வின் அறிமுகம்**

இன்றைய வேகமான சுழற்சி முறை உலகிலே மனிதனின் ஆய்வு முயற்ச்சிகள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளன. கல்வித்துறையைப் பொறுத்தவரை வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில்நுட்ப உலகிற்கு ஏற்றவாறு தகவல் தொழில்நுட்ப திறன்களை பயன்படுத்துவதாகவும் ஆய்வுகள் அமைவது பயனுடையதாகும். மாறி வரும் உலகில் சவால்களுக்கு முகம் கொடுக்கவும் மனிதன் விழுமியங்களை வளர்ந்தெடுக்கவும் கல்வியியல் ஆய்வுகள் உதவுகின்றன.

கடந்த காலத்தின் அனுபவங்களை உள்வாங்கி நிகழ்காலத்தில் அவற்றை செம்மைப்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு அளிப்பனவாக கல்விசார் ஆய்வு முறைகள் அமைதல் வேண்டும். இவ்வாறு அமையுமாயின் மனித குலம் கல்வியின் ஊடாகத் தனக்கு பொருத்தமான அடைவுகளை பெற்று உய்ய முடியும். "சமூக வாழ்க்கை, பொருளாதார ஒத்துழைப்பு, இனப்பெருக்கம், கல்வி" ஆகிய 4 கருமங்கள் மானிடக் குடும்பத்தினரினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சமூக விஞ்ஞானி ஜி.பி.மர்டோச் குறிப்பிடுகின்றார். இதன் மூலம் மனிதனுக்கும் கல்விக்கும் இடையேயான நெருங்கிய தொடர்புகள் வலியுறுத்தப்படுகின்றன.

குழந்தையை சமூக மயப்படுத்தலே ஆரம்ப கல்விப் பணியாக இருந்து வருகின்றது. கல்வியின் அடிப்படைக் குறிக்கோள் உடல், உளம், மெய்ப்பாடு, ஓழுக்கம், என்பன ஒன்றிணைந்த ஒரு முழு

மனிதனை உருவாக்குதலாகும். எனினும் தனிமனிதனின் திறமைகளை வளர்ப்பது மட்டுமன்றி அவனைச் சமூக இயைபாக்கத்திற்குள் கொண்டு வருவதும் அவனுக்கு உலகத்தோடு ஒட்டி உறவாடும் திறனை வழங்குவதும் கல்வியின் குறிக்கோள் ஆகும்.

கல்வி ஆனது பொதுவான தொரு பண்பாட்டையும் தனியான பகுத்துணர்வையும் ஒழுக்க சமூக பொறுப்புரிமை உணர்ச்சியையும் ஏற்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் வலியுறுத்துகின்றது. கல்வி ஏறத்தாழ ஒவ்வொரு மனித முயற்சியுடனும் தொடர்புடையது என்பதால் இது எல்லா அம்சங்களையும் தன்னுள் அடக்குகின்றது. கல்வி என்பது உருமாற்றும் வல்லமை கொண்ட மனித உரிமையாகும். சுதந்திரம், ஜனநாயகம் நீடித்து நிலைத்திருக்கும் மேம்பாடுயாவற் றிற்கும் இதுவே அடிப்படையாக அமைகின்றது.

"சகலருக்கும் கல்வி என்னும் இலட்சியம் மற்றெந்த இலக்கைப் பார்க்கிலும் அதிக முன்னுரிமை பெற வேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானின் கூற்றில் இருந்து கல்வியின் அவசியம் உலகுக்கு வழங்க வேண்டிய முன்னுரிமையும் வலியுறுத் தப்படுகின்றது. தன்சானிய நாட்டின் அதிபரும் தத்துவ மேதையுமாகிய ஜீலியஸ் ஜியரேயின் பிரபலமான கூற்றாகிய "கல்வி ஒரு நாடு வறுமையில் இருந்து தப்பி ஓடுவதற்கான மார்க்கமன்று அதனை சாடுவதற்கான மார்க்கமாகும்". என்பதிலிருந்து உலகினை வறுமையின் கோரப் பிடியிலிருந்து விடுபடுவதற்கான தனியொரு கருவி கல்வியே என்பதை அறிய முடிகின்றது.

மனிதனை மையப்படுத்திய மேம்பாட்டை வலியுறுத்திய அறிஞரான மஹ்புக் உல் ஹக் அவர்கள் "மனித மேம்பாட்டின் உயிர்ப்புக்கு கல்வியே முக்கியமானது எனவும் கல்வியன்றி மேம்பாடு பரவவும் மாட்டாது. எனவும் குறிப்பிடுவதிலிருந்து கல்வி மட்டுமே ஓட்டு மொத்த மேம்பாட்டிற்கான அடிப்படைக் கருவி என்பது தெளிவாகின்றது. பெண்களுக்கு வல்லமை அளிப்பதற்கும் மனித உரிமைகள் சனநாயகம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும் சனப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கும் சுற்றாடலை பேணுவதற்கும் கல்வியே தனியொரு கருவி என ஜொம்தியன் மாநாட்டின் மூலம் உலகு ஏற்றுக் கொண்டது.

தற்போது உலகில் சுமார் ஒரு பில்லியன் மக்கள் .எழுதவோ, வாசிக்கவோ முடியாத வகையில் அதாவது 1/6 பங்கினர் எழுத்தறிவிலிகளாக உள்ளனர். வளர்முக நாடுகளில் 130 மில்லியனுக்கும் அதிகமான பள்ளிப் பருவத்தினர் கல்வி வசதியின்றி உள்ளனர். பல மில்லியன் கணக்கானோர் தரம் குறைந்த கல்வியினால் பாதிக்கப்படுகின்றனர். கல்வி கற்கும் உரிமை மறுக்கப்படுவதால் மக்களின் ஆக்க பூர்வமான உழைப்பு திறன் பாதிக்கப்படுகின்றது. தம்மையும் தம் குடும்பங்களையும் பேணிப் பாதுகாக்கும் வல்லமை இல்லாது போகின்றது. அத்துடன் பிள்ளைகளின் முழுமையான ஆற்றல் வெளிப்பாட்டிற்கும் அது தடையாகின்றது.

இவ்வகையில் நோக்கும் போது, 1945 இலிருந்து இலவசக் கல்வியைப் புகட்டி வரும் இலங்கையில் 1978ஆம் ஆண்டு நடைமுறையிலிருக்கும் அரசியல் யாப்பின் உறுப்புரை 27 பிரிவு எழுத்தறிவின்மையை முழுவதும் ஒழிப்பது அனைத்து மக்களுக்கும் பரவலான மற்றும் சமமான கல்வியை எல்லா மட்டங்களிலும் பெறுவதற்கான உரிமையை உறுதிப்படுத்துகின்றது. இதன் பயனாக கடந்த ஐம்பது ஆண்டு கால கல்வி வளர்ச்சி பயனாக எழுத்தறிவு 90% த்திற்கு மேலாக (92.57%) எட்டியுள்ளது. அரசாங்கம் கணிசமான தொகையினைப் பாடசாலைக் கல்விக்கு செலவிடுகின்றது. புலமை பரிசில், இலவச பாடநூல், இலவச கல்வி, இலவச சீருடை போன்றன இவ் வெற்றிகளுக்கான அடிப்படை ஆகும். (சந்திரசேகரன், சோ. 2000) இவ்வாறு உள்ள போதும் கல்வி முறையின் ஒவ்வொரு மட்டத்திலும் குறைபாடுகள் உள்ளன. எனப் பொதுக்கல்வி சீர்திருத்தங்கள் பற்றிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. சேரி வாழ் மக்களின் பிள்ளைகள் 30% பாடசாலை செல்வதில்லை 5 தரத்தில் 1/5 பங்கினரே எழுத்தறிவில் அடையவேண்டிய அடைவு பெற்றுள்ளனர். இவ் வகையில் இவ்வாய்வு அவசியமானதாகும்.

**ஆய்வின் நோக்கம்**

**பொது நோக்கம்**

வடமராட்சி பிரதேச பாடசாலை மாணவர்களின் கல்வி ஈடுபாடு மற்றும் அடைவுமட்டத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளை கண்டறிவதுடன் அவை எந்த அளவில் தாக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை கணடறிதல் ஆகும்.

**சிறப்பு நோக்கங்கள்**

- ❖ பாடசாலை வரவு ஒழுங்கு
- ❖ தந்தையின் கல்வி மட்டம்
- ❖ தாயின் கல்வி மட்டம்
- ❖ பெற்றோர் ஆர்வம்
- ❖ இடப்பெயர்வுகள்
- ❖ வீட்டில் கல்வி கற்பதற்கான வசதிகள்
- ❖ தனியார் கல்வி வசதி
- ❖ மாணவர்கள் வேலைகளில் ஈடுபடல்
- ❖ தந்தைகளின் மதுப்பழக்கம்
- ❖ குடும்பத்தின் வருமான நிலமை
- ❖ குடும்ப சமூக பொருளாதார அம்சங்கள்
- ❖ வீடு அமைந்துள்ள சூழல்
- ❖ அயலவர் மற்றும் நண்பர்களின் தொடர்பு
- ❖ குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை என்பன கல்வி நிலையில் வகிக்கும் பங்கினைக் கண்டறிதல் ஆகும்.

**ஆய்வுப்பிரச்சினை**

- ❖ மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தில் 25 ஆவது சரத்து எல்லாப் பிள்ளைகளுக்கும் சமூகப் பாதுகாப்பு உரிமையும் கல்வி உரிமையும் உண்டெனக் கூறப்படுகின்றது.
- ❖ போரின் கொடுமையால் சிறுவர் சிறுமிகளது எதிர்காலம் பாதிப்படைந்து பலர் மனநிலை சிறுமிகளரது எதிர் காலம் பாதிப்படைந்து பலர் மன நிலை குழம்பியவராகவும், விரக்தி உடையவராகவும், தொழில் செய்வதில் நாட்டம் கொண்டுள்ளமையும், கடுமையான உழைப்பின் பின் குடிப் பழக்கத்துக்கு அடிமையாகியும் இப்பிரதேசங்களில் உள்ளனர்.
- ❖ இன்னொரு சரார் அபரிவீதமான ஆசைகளால் உந்தப்பட்டு குடிப்பழக்கம், சகோதரர், சகோதரிகளை மதியாமை, தகாதவர்களுடன் கூட்டுசேர்தல், தீய பழக்க வழக்கங்களில் நாட்டம் கொண்டும் கல்வியை சிதைத்து ஏனோ தனோ என்ற வாழ்க்கை வாழ்வது மட்டுமல்லாமல் சமூகத்துக்கு இடைஞ்சலாக உள்ளனர்.
- ❖ மேலும் மாணவர் கல்வியில் அரசாங்க நடவடிக்கைகளும் குறைந்தளவு சலுகை உடையனவாக உள்ளன. அதாவது "கொழும்புக்கு பால், அனுராதபுரத்துக்கு – கொக்கரிக்காய், தமிழருக்கு – காலம் கடந்த பால்மாப் பைக்கற்" என யாழ்ப்பாண குடாநாட்டு மாணவன் ஒருவன் கூறியதாக செபஸ்தியாம் பிள்ளை ஜீ. எம் (1999) இல் என்ற சமூகவியலாளர் ஒருவரால் குறிப்பிடப்படும் கூற்றில் இருந்து நிலமமை தெளிவாகின்றது.
- ❖ பாடசாலை வளங்கள் வேறுபட்டு அமைதலும் அரசாங்க பாடசாலைகளில் ஏனோ தனோ என்ற கல்வி நடவடிக்கைகளும் தனியார் கல்வி நிறுவனங்களில் சிறந்த சிறந்த கல்வி போதனைகளும் ஆசிரியர்களால் வழங்கப்படுகின்றமை.

போன்ற பிரச்சினைகள் இந்த ஆய்வினை மேற்கொள்வதற்கான தூண்டுதலாக அமைந்துள்ளன.

**ஆய்வு வினாக்கள்**

- வடமராட்சி பிரதேச கல்வியில் சமூக பொருளாதார காரணிகள் தாக்கம் புரிகின்றனவா?
- வறுமை நிலை கல்வியில் தாக்கம் புரிகின்றனவா?
- பால் நிலை கல்வியில் தாக்கம் புரிகின்றனவா?
- குடும்ப பொருளாதார நிலை கல்வியில் செல்வாக்கு செலுத்துகின்றனவா?
- மாணவர்களின் குழப்பமான சூழ்நிலைகளும் தாக்கம் செலுத்தலாமா?
- வேலை இன்மை, வீட்டில் பொறுப்பாக இருப்பவர் கல்வியில் பின் தங்குவாரா?

**கடந்த கால ஆய்வுகள் தொடர்பான மீளாய்வு**

Good Man (1956) இல் மேற்கொண்ட ஆய்வில் பல கைத்தொழில் நாடுகளின் கணித அடைவிற்கும் பெற்றோரின் தொழிலுக்குமான இடைத் தொடர்பு (Corrlation) பூச்சியமாக காணப்படுகின்றது. என்ற முடிவுக்கு வந்தார். Colman (1966) ஐக்கிய அமெரிக்க நீக்கிரோ குழந்தைகள் வெள்ளையர் குழந்தைகளை விட கல்வியில் பின் தங்கி இருப்பதற்கான காரணங்களை கண்டறிந்தார். இவ் ஆய்வு 2 வருடங்களாக 4000 பாடசாலைகளில் 60000 ஆசிரியர்களிடமும் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவில் மாணவர் பெறும் கல்வியின் அளவிற்கும் கல்விக்கான அடிப்படைப் பள்ளி வாதிகளுக்கும் இடையே பெரிய தொடர்பு காணப்படவில்லை என்பது தெளிவாக்கப்பட்டது. அமெரிக்க நீக்கிரோ குழந்தைகளுக்கும், வெள்ளையர் குழந்தைகளுக்கும், இடையிலான கல்வி அடைவு வேறுபாட்டுக்காரணம் அக் குடும்பங்களின் சமூக பொருளாதாரநிலை வேறுபாடுகளுக்கு காரணம் அக்குடும்பங்களின் சமூக பொருளாதார ரிலை வேறுபாடுகளே என்பது நிரூபிக்கப்பட்டது.
வீட்டுச் சூழல் ஆனது மாணவர்களின் கல்வியில் செல்வாக்கு செலுத்தும் ஒரு சமூக காரணி என்பதனை (1976) Postalath wait (1975) ஆகியோர் புலப்படுத்தியுள்ளனர். வீட்டில் அமைதியான சூழல் படிப்பதற்கு ஏற்றதாகவும் கல்வி கற்க பெற்றோர் ஊக்கமளிப்பதாகவும் பிற துணைக் கருவிகளை வானொலி புத்தகங்கள், தொலைக்காட்சி, என்பவற்றை பெற்றோர் வழங்குபவர்களாகவும் இருக்கையில் பிள்ளைகளின் கல்வி தேர்ச்சி மேம்பாடு அடையும் எனக் கண்டறிந்துள்ளனர். Iencks (1972) என்பவர் குடும்ப புலமே கல்வி தொடர்பான பெறுபேறுகளைத் தீர்மானிக்கும் முக்கிய காரணி எனச்சுட்டிக்காட்டியுள்ளார்.

Rutten (1979) கீழ்மட்ட தொழிற் சூழல்களில் இருந்து வருகின்ற சாரசரி அறிவுத்திறனை விட குறைந்த மாணவர்களே மேசமான வரவினை உடையவர்களாக காணப்படுகின்றனர். எனவே பெற்றோரின் தொழிற் சூழலானது பிள்ளைகளின் கல்வியில் செல்வாக்கு செலுத்தும் ஒரு சமூக காரணியாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.
ஜெயராசா (2000) என்ற ஆய்வாளர், யாழ்ப்பாணத்து மரபு வழிக் கல்வி பற்றிய ஆய்வொன்றை மேற்கொண்டார். இவ் ஆய்விற்காக பல்வேறு ஆதாரங்களை திரட்டியதுடன் பலரை செவ்வியும் கண்டுள்ளார். யாழ்ப்பாணத்து மரபுவழிக்கல்வியில் சமூக கட்டமைப்பு நிதியம், தர்மம், ஒழுக்கம், கலைகள், சமயம், தொன்மக்கள், பெண்ணியம் போன்ற சமூக – பொருளாதார காரணிகள் செல்வாக்கு செலுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**ஆய்வின் கருதுகோள்**

இந்த ஆய்விலே கல்வியில் ஆய்வுப் பிரதேசத்தின் கல்வி நிலையில் செல்வாக்கு செலுத்தும் சமூக பொருளாதார காரணிகளின் வகிபங்கு பின்வரும் கருதுகோள் அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

- ❖ வரவு ஒழுங்கு, கல்வித்திறன், அக்கறை, குறைந்தவர்கள் கல்வி அடைவு மட்டத்தில் குறைந்த பெறுபேற்றையே அடைகின்றனர்
- ❖ குடும்ப பொருளாதார நிலை, பெற்றோர் தலைமைத்துவம், என்பன கல்வி அடைவு மட்டத்தில் நேர்க்கணிய செல்வாக்கு செலுத்துகின்றது.
- ❖ சாதி, பால், சமூகபுறத்தள்ளல் என்பன குறைந்த அடைவு மட்டத்தினைத் தூண்டுகின்றது.
- ❖ வீட்டுச்சூழல், சகபாடிகளுடனான தொடர்புகள், சமூக ஆளுமை சிறந்ததாக அமைகின்ற போது சிறந்த கலவி மட்டத்தை அடைய முடிகிறது.

**ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வு தொடர்பான தரவுப் பகுப்பாய்வுக்குத் தேவையான தரவுகள் பின்வரும் வழிகளில் பேறப்பட்டன. இவ்வகையில்

- ❖ முதன்மைத் தரவுகள்/ முதலாம் தரவுகள்
- ❖ துணை நிலைத் தரவுகள்/ இரண்டாம் நிலைத் தரவுகள்

**முதலாம் ரிலைத் தரவுகள்**

முதன்மைத் தரவுகள் மாணவர்களிடமும், பெற்றோர்களிடமும் நேர்காணல் வினாக்கொத்து வழங்கப்பட்டும் புலனாய்வு முறை மூலமும் பெறப்பட்டன.

**இரண்டாம் ரிலைத் தரவுகள்**

இந்த ஆய்வுடன் தொடர்புடைய வகையில் வெளியான நூல்கள், ஆண்டறிக்கைகள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், நூலக வெளியீடுகள், ஆகியவற்றில் இருந்து தரவுகள் திரட்டப்பட்டன. அத்துடன் அரச, அரசசார்பற்ற நிறுவன வெளியீடுகள் போன்றனவற்றின் ஆய்வு அறிக்கைகள், நூல்கள் போன்றவற்றிலிருந்தும் தகவல்கள் திரட்டப்பட்டன.

**ஆய்வுக்கான மாதிரித் தெரிவு**

1 ஆய்வுக்குரிய மாதிரிகளை தெரிவு செய்தல்.

2 வகுப்புக்களைத் தெரிவு செய்தல்.
3 பரீட்சைப் பெறுபேறுகளைத் தெரிவு செய்தல்.
4 பாடசாலைகளைத் தெரிவு செய்தல்.
வகை அடிப்படையிலான பாடசாலைகள் தெரிவு செய்தல்.

1) AB, 1AB, 1C, II, III என்ற வகையில் தெரிவு செய்தல்.
2) கோட்ட அடிப்படையிலான பாடசாலைகளைத் தெரிவு செய்தல்.
   1. கரவெட்டிக் கோட்டம்.
   2. மருதங்கேணிக் கோட்டம்.
   3. பருத்திர் துறைக் கோட்டம்.
3) பால் அடிப்படையிலான பாடசாலை தெரிவு.

இவ்வாறாக ஆய்வுக்கான மாதிரிகள் மேற்காட்டிய அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு 226 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களிடமிருந்து தேவையான தரவுகள் திரட்டப்பட்டு தரவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**தரவு பகுப்பாய்வு**

வடமராட்சிப் பிரதேசத்தில் சராசரியாக 12.33% மாணவர்கள் திறமையாகச் சித்தியெய்தியிருந்தனர். கரவெட்டிக் கோட்டமே 13.77% இனை பெற்று முதன்மையாக உள்ளது. மருதங்கேணி கோட்டம் மிகவும் பின்தங்கிய நிலையில் 2.38% ஆகவே உள்ளது.

2011 இல் 202 பேர் திறமை சித்தியடைய முடிந்தது. இங்கு கரவெட்டி கோட்டத்துக்கு சமனாக மருதங்கேணி கோட்டத்தில் 176 என்ற உயர்புள்ளி பெற்றிருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். ஆனாலும் சித்தி வீதத்தைப் பொறுத்தவரை கரவெட்டிக் கோட்டம் அதிகளவு சித்தி வீதத்தையும் பருத்தித்துறை கோட்டமும் மருதங்கேணி கோட்டமும் பின்தங்கியே இருக்கின்றன.

இவ்வகையிலே 1685 பேர் தோற்றிய இக்கோட்டத்தில் சித்திவீதம் 11.99% மட்டுமே உள்ளது. இதில் கரவெட்டி கோட்டம் 16.9% ஆகவும், உயர்நிலையில் பருத்தித்துறை, மருதங்கேணி ஆகியவை முறையே 9.5%, 6.4% ஆக பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன.


இதற்கான பிரதான காரணமத்தினை நோக்கும்போது பெரும்பாலான சமூகப் பொருளாதார காரணிகள் தான் தாக்கம் செலுத்தியிருக்கக் கூடும் என்ற வகையில் ஆய்வாளனால் ஆய்வு முன்னெடுத்துச் செல்லப்பட்டது.


**பிள்ளைகளின் கல்வி மீது பெற்றோர் கொண்டுள்ள ஆர்வம்**
**அட்டவணை -1**

| பெற்றோர் ஆர்வம் | மாணவர் எண்ணிக்கை | நூற்றுவீதம் |
|---|---|---|
| அதிகம் | 034 | 15.04 |
| ஓரளவு | 103 | 45.57 |
| குறைவு | 89 | 39.38 |
| | 226 | 100% |


***மூலம்: களஆய்வு -2012***

**தந்தைதாயின் கல்வி மட்டம்**




**பாடசாலை செல்லாமைக்கான காரணங்கள்**




**குடும்பத்தின் சமூக – பொருளாதார நிலை**

**அட்டவணை -2**

| குடும்ப பொருளாதார நிலை | மாணவர்களின் எண்ணிக்கை | நூற்றுவீதம் |
|---|---|---|
| உயர் மட்டம் | 190 | 84.07 |
| தாழ்மட்டம் | 36 | 15.92 |

***மூலம்: வெளிக்கள ஆய்வு - 2012***

**குடும்பத்தில் உள்ள பிள்ளைகள்**

**அட்டவணை - 3**

| பிள்ளைகள் தொகை | குடும்பங்களின் எண்ணிக்கை | நூற்றுவீதம் |
|---|---|---|
| 1 | 5 | 2.21 |
| 2 | 37 | 16.37 |
| 3 | 38 | 16.81 |
| 4 | 64 | 28.31 |
| 5 | 50 | 22.12 |
| 6 | 20 | 8.84 |
| 7 | 12 | 5.30 |
| | 226 | 100% |

***மூலம்: வெளிக்கள ஆய்வு - 2012***

**ஆய்வு தொடர்பான முன்மொழிவுகளும் முடிவுரையும்**

1. சிறுவர் உரிமைகளை நிலைநாட்டுதல்
2. பெற்றோரின் அறிவுமட்டங்களை உயர்த்துதல்
3. முன் ஆரம்ப கல்வியில் சமவாய்ப்பு மற்று சமசந்தர்ப்பத்தை வழங்கல்
4. பாடசாலை, முன்பள்ளி, நூலகம், விளையாட்டு மைதானம், பூங்கா, சிறிய வைத்தியசாலையை கொண்ட தொகுதி ஒன்றை உருவாக்கல்
5. புனர்வாழ்வு, புனர்நிர்மான பணிகளை விரைவுபடுத்ததல்
6. ஜனநாயன நடைமுறைகளை வலுப்படுத்தல்
7. வறுமையின் வரையறை மாற்றி அமைத்தல்

**முடிவுரை**

இந்த ஆய்வானது வடமராட்சிப் பிரதேச பாடசாலை மாணவர்களின் கல்வி நிலையில் சமூக பொருளாதார காரணிகள் எத்தகைய தாக்கத்தை செலுத்துகின்றது என்பதும் எந்தளவில் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதும் நோக்கப்பட்டுள்ளது. ஆய்வுக்கென வடமராட்சி பிரதேசத்தில் உள்ள கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய கல்விக்கோட்டங்கள் எடுக்கப்பட்டன. ஒரு கோட்டத்தில் வளர்ச்சியடைந்த பாடசாலைகள் இரண்டும் வளர்ச்சிகுறைந்த பாடசாலைகள் இரண்டுமாக 226 மாணவாகள் இவ் ஆய்வுக்காக உட்படுத்தப்பட்டு சமூக, பொருளாதார காரணிகளின் வகிபாகம் ஆய்வு செய்யப்பட்டது. இவ்வகையில் பாடசாலை வரவு ஒழுங்கு, தாய் தந்தையரின் கல்வி மட்டம், பெற்றோர் கொண்டுள் ஆர்வம் இடப்பெயர்வுகள், கல்வி கற்பதற்கான வசதிள், தனியார் கல்வி வசதிகள், தந்தை மதுப்பழக்கம், குடும்ப சமூக பொருளாதார நிலைகள், வசிக்கும் சூழல், குடும்ப பிள்ளைகளின் எண்ணிக்கை போன்ற சமூக பொருளாதர அம்சங்கள் கல்வி நிலையில் தாக்கம் செலுத்துகின்றன என்பது கருதுகோள் ரீதியாக வாய்ப்பு பார்க்கப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன அவ்வகையில் கல்வி நிலையில் சமூக பொருளாதர காரணிகள் அதிகம் தாக்கம் புரிவது ஆய்வு ரீதியாக கண்டறியப்பட்டது. இத்தகைய ஓர் செயற்றிட்டம் பன்மை சமூதாய அமைப்பைக் கொண்ட இலங்கையில் வடமராட்சி

பிரதேச கல்வி நிலைமைகளின் தரத்தை ஓரளவிற்கேனும் அதிகரிக்கக் கூடிய வகையில் உதவும் என்ற நம்பிக்கை உள்ளது. “பிச்சை புகினும் கற்கை நன்றே” என்பதற்கினங்க இம்மாணவாகள் கல்வியில் அக்கறை கொள்வதன் ஊடக சுவீட்சமான வாழ்வை அடைய முடியும் எனலாம்.

**உசாத்துணைகள்**

அரியபுத்திரன் ந.(2001) க.பொ.த சோதனைகளில் முதல் தடவையில் சித்தி பெறத்தவறிய மாணவர்கள் பற்றிய ஆய்வு 1989- 1993 வெளியிடப்படாத அய்வுக்கட்டுரை, உயர் பட்டப்படிப்புக்கள் பீடம் யாழ்பாணப்பல்கலைக்கழகம் இலங்கை.

ஆறுமுகம் .வ-(2000) கல்வி பாரம்பரியங்கள் உயர்கல்விக் சேவை பதிப்பகம் , யாழ்பாணம் இலங்கை

ஏலிசபெத் நிசான் (1997) இலங்கை : ஒரு கசத்துப்போன அறுவடை : சர்வதேச சிறுபாண்மை உரிமைக்கு அறிக்கை லண்டன் ஐக்கியஇராட்சியம்.

கருணாதிஸ்ஸ எஸ்.ஏ ருபசங்க, ரிஜீ – நட்புறவு களில் சிறுவர் உழைபடபு சுரண்டல் பொருளியல் நோக்கு அராய்ச்சி கழி மக்கள்வங்கி தலைமையகம், கொழும்பு 2 இலங.கை மே 1983 பக்கம் 32

கல்வி கலாசார அலவல்கள் அமைச்சு (1969) இலங்கை கல்வி பகுதி 1 நூற்றாண்டு விழா மலர் இலங்கை.

குகபாலன் 1996 யாழ்ப்பாண இடப்பெயர்வு புவியல் துறை ,யாழ்பாண பல்கலைக்கழகம் இலங்கை.

சந்திரசேகரன் சோ.(2000) சுந்தர இலங்கையின் கல்வி வளாச்சி சாதனைகளும் பிரச்சிணைகளும் கைலாசநாதம் , பவளவிழா மலர் யாழ்பாணம் இலங்கை

சந்திரசேகரன் சோ- (1991) கல்வியல் கட்டுரைகள் சூடமணி பிரசுரம் சென்னை -33 இந்தியா.

சந்திரபோஸ் -சு (1989) தாழ்த்தப்பட்ட தமிழர்களின் கல்வி வளர்ச்சி , யாழ்பாணம் இலங்கை

சமரசிங்க குணசெகரா (1998) பிள்ளைகளின் உரிமை பற்றிய சட்ட திட்டங்கள் கல்வி முகாமைத்துவ அபிவிருத்தி துறை தேசிய கல்வி நிறுவாகம் , மகரகம இலங்கை

சிவத்தம்பி கா. (1994) தமிழ் சமூகம் பண்காட்டின் மீள் கண்டு பிடிப்பும் , நியூ செஞ்சரி புக்கவுஸ் சென்னை இந்தியா.

சின்னத்தம்பி மா,சிறுவர் , சிறுவர் ஊழியம் மற்றும் கல்வி ஓர் மீளாவு , கலைஞானம் 6 , 2000 , பக்கம் (39 – 46)

சுசிலா அருளாணந்தம் - இடைநிலை பாடசாலை மாணவரது கல்வியில் தாக்கம் கொள்ளும் பாடசாலை வளங்கள் பற்றிய ஒரு நோக்கு யாழ்மாவட்டத்தை அடிப்படையாக கொண்ட அய்வு கலைப்பீடம் ,யாழ்பல்கலைக்கழகம் . யாழ்ப்பாணம் நவம்பர் 1999 பக்கம் 116- 129

செபஸ்தியம் பிள்ளை றீ. ஏம் கல்வியும் எமது சமூகமும் ஒரு சமூகவியல் நோக்கு மானுடம் சமூகவியல் ஒரு …. சமூகவியல் சமூகம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இலங்கை 1998, 1999 பக்கம் 75

ஜெயராச .ச (2000) யாழ்பபாணத்து மரபுவழிக்கல்வி கல்வியல் துறை யாழ்பல்கலைக்கழகம் .யாழ்பாணம் இலங்கை.

Council of NGO s, (2000) framework for relief, rehabilitation and reconciliation Jaffna peninsula final report of the workshop .council of NGO Jaffna district

Grace Machel (1996) the impct of war on children www.unicef.org

Hemachandra, H.C –the current strafe of Education in srilanka. Economic Review people’s Bank, research department srilanka 1990 October

Selarajh – (1998) school Aged children in Jaffna district save the children fund (U.K) UNICEF.